Rgistered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 89 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி சித்திரை 13 ஆம் நாள் துல்ஹஜ் 12 (25-4-64) சனிக்கிழமை இதழ் 74

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 1-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

## கோடீஸ்வரனுக்கு வெற்றி

# தனிச்சிங்களச் சட்டம் செல்லுபடியாகாது!

## கோடீஸ்வரன் வழக்கில் நீதிபதி தீர்ப்பு

### சம்பள உயர்வும், வழக்கு செலவும் கொடுக்குமாறும் தீர்ப்பு

கொழும்பு, வெள்ளி

**சிங்களம்மட்டும் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணானது என கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. ஏ. எஸ். டி. கிறெட்ஸர் கோடீஸ்வரன் வழக்கில் தீர்ப்பளித்தார்.**

**இவ்வழக்கில் மனுதாரான செல்லையா கோடீஸ்வரன் வருடாந்த சம்பள உயர்வுக்கு தகுதியுடையவர் என்றும், கேகாலை அரசாங்க ஏஜெண்ட் சம்பள உயர்வை நிறுத்தியது தவறான செயல் என்றும் நீதிபதி தம் தீர்ப்பில் கூறியிருக்கிறார். மனுதார் கோடீஸ்வரனுக்குவழக்குச்செலவை அளிக்குமாறும் தீர்ப்பளிக்கப்பட்டது.**

இத் தீர்ப்பைக் கேட்பதற்காக பெருந்தொகையான அரசாங்க ஊழியர்களும், வழக்கறிஞர்களும் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தனர். தீர்ப்புக்குப் பின் மனுதாரின் சார்பாக ஆஜரான திரு. திருச்செல்வம், திரு. ரங்கநாதன் ஆகியோரை அரசாங்க ஊழியர் சூழ்ந்துகொண்டு நன்றி தெரிவித்தனர். செனட்டர் நடேசன், திரு. ஏ. ஸி. நடராஜன் உட்பட பிரபல வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தார்கள்.

நீதிபதி காலை 10-45 க்கு தமது ஆசனத்திற்கு வந்த பின் தீர்ப்பை வாசித்தார். புல்ஸ்கேப் பேப்பர்களில் தீர்ப்பின் வாசகம் இருந்தது.

நீதிபதி கிறெஸ்டர் வழங்கிய தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

"திரு. கோடீஸ்வரன் ஆங்கில மொழி மூலம் சேவைக்கு அனுமதிக்கப்பட்டவர். ஆங்கிலத்துடன், மாற்று தகைமைகளில் ஒன்றான தமிழில் சித்தியடைந்து 1-10-59-ல் பொது அரசாங்க எழுதுவினைஞர் சேவைக்கு நியமிக்கப்பட்டார். சிங்களம் மட்டும் சட்டம் 1956-ம் ஆண்டே நிறைவேற்றப்பட்டது.

அரசாங்கம் தனது உத்தியோக அலுவல்கள் யாவற்றையும் பூரணமாக சிங்களத்தில் நடத்தப் போவதாக கூறிய கடைசி நேரம்வரை (அதாவது 31-12-60 வரை) கோடீஸ்வரனுக்கும், அவரைப் போல ஆங்கிலத்தில் சேவைக்கு அமர்த்தப்பட்டவர்களுக்கும் சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டும் என்ற அவசியமோ அல்லது சிங்களம் தெரிய வேண்டுமென்ற அவசியமோ இருக்கவில்லை. 1-1-61 தொடக்கம் தனிச் சிங்களம் அமுலாக்கப்பட முயறசிக்கப்பட்ட போது இவ்வித அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அதுவரையும் ஆங்கிலத்திலோ அல்லது சிங்களத்திலோ அல்லது தமிழிலோ செய்து வந்த அலுவல்களை உத்தியோகஸ்தர்கள் சிங்களத்தில் மட்டும் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் 'நிர்வாக உத்தாவு' பிறப்பிக்கப்பட்டதல மூலம் ஏற்பட்டது. தனிச் சிங்கள அமுல் 1-1-61ல் பூரணமாக்கப்படும் என திகதி குறிக்கப்பட்டிருந்தது. இவ்விதம் சிங்களம் பூரணமாக அமுலாக்கப்பட்டதும் திரு. கோடீஸ்வரன் போன்ற ஆங்கில மொழி மூலம் சேவைக்கு அமர்த்தப்பட்ட அரசாங்க உத்தியோகஸ்தர்கள் சிங்களத்தை படிப்பதா அல்லது வேலையைவிட்டு விலகுவதா என்ற பிரச்னையே ஏற்பட்டது. அவர்கள் சிங்களத்தை பயில்வதற்கும் வேலையைவிட்டு விலகுவதற்கும் அரசாங்கம் உத்தியோகஸ்தர்களுக்கு உதவ அரசாங்கம் தயாராக இருந்ததென்பதை திறைசேரியின் 29-11-56 திகதியிடப்பட்ட 336 இலக்க சுற்று நிருபம்தெளிவாக்குகின்றது. மொழி அமுல் சம்பந்தமாக விடுக்கப்பட்ட மேற்கூறப்பட்ட இந்த 336-ம் இலக்க திறைசேரி சுற்று நிருபத்தில் சிங்களத்தை இனிமேல் படித்து வேலை செய்ய முடியாது எனக் கருதும் உத்தியோகஸ்தர்கள் ஓய்வு திட்டத்துக்கான தகுதிகளை அடைந்திருப்பின் அவர்களுக்கு போனஸ் கொடுக்கப்படும் எனவும் உறுதி கூறப்பட்டிருந்தது. உத்தியோகஸ்தர்கள் சிங்களம் படிப்பதிலோ அல்லது வேலையைவிட்டு விலகுவதிலேயோ ஏற்படும் சாதன கஷ்டங்களைவிட அந்தப் பிரச்னை மிகவும் பெரிதானதாகும். திரு. கோடீஸ்வரனும் பல தமிழ் அரசாங்க ஊழியர்களும் சிங்களம் மட்டும் சட்டம் அமுலாக்கப்படுவதால் தமது சமுதாயம் அவமதிக்கப்படுவதாக கருதினார்கள். எனவே சிங்களத்தை படிக்கவேண்டியது தங்கள் தலைவிதி என்று எண்ணுவதைவிட எவ்வளவுதான் இன்னல்கள் விளைந்தாலும் சட்டத்தை எதிர்த்து நிற்பது என்ற மனோதிடம் அவர்களிடம் மேலோங்கி நின்றது. (இச்சந்தர்ப்பத்தில் ஷேக்ஸ்பியரின் வாக்கியங்களை நீதிபதி குறிப்பிட்டுக் கூறினார்)

(6-ம் பக்கம் பார்க்க)

## கோடீஸ்வரன் வருகிறார்

யாழ்ப்பாணம், சனி

அரசாங்க தமிழ் எழுதுவினைஞர் சங்கததலைவர் திரு. கோடீஸ்வரன், அரசாங்க தமிழ் எழுது வினைஞர்சங்கமும் மற்றத் தொழிற் சங்கங்களும்கூட்டாக நடத்தவிருக்கும் மே தின விழாவில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்குவருவாரென அறியப்படுகிறது. இக்கூட்டத்தில் திரு. கோடீஸ்வரன் தலைமை தாங்கவிருக்கிறார்.

## கோடீஸ்வரன் நன்றி

கொழும்பு வெள்ளி,

**வழக்கில் வெற்றி பெற்றுள்ள திரு. செ. கோடீஸ்வரன்வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தமுயற்சியில் உறுதியாக நின்ற தமிழ் அரசாங்க எழுதுவினைஞர்களுக்கும் வழக்கை நடத்த உதவிய திரு. வழக்கறிஞர்களுக்கும் போதிய ஊக்கமளித்த எஸ். ஜே வி. செல்வநாயகத்துக்கும் தமது நன்றியைத் தெரிவித்துள்ளார்.**

வழக்கின் முடிவு தமிழ் அரசாங்க எழுதுவினைஞர்களுக்கு எல்லாம் பெரும் வெற்றியாகவும், விடிவாகவும் அமைந்துள்ளது என்றும் நியாயமற்ற நிபந்தனை தோற்கடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

நியாயமான போராட்டத்துக்கு எப்போதும் கடவுள் துணை இருக்குமென்றும், நியாயமான கோரிக்கைகளுக்காக தொடர்ந்து உழைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முற்றிவரும் அரசியல் நெருக்கடி

## இலங்கரத்ன கூறும் இரு யோசனைகள்

கொழும்பு, வெள்ளி

"இந்த இக்கட்டான நிலையில் முற்போக்குவாதிகள் அரசாங்கத்துக்கு உதவ முன்வராவிடில் பிரதமர் வேறுவித நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டியேற்படும். நாங்கள் உபயோகிக்க விரும்பாத துப்பாக்கிகளை உபயோகிக்க வேண்டியேற்படும்."

இவ்வாறு கம்பஹாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் நிதிமந்திரி திரு. ரி. பி. இலங்கரத்ன குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

"முற்போக்குத் தலைவர்களை எங்களுடன் இந்தச் சமயத்தில் சேருமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். சமயத்தை உணர்ந்து எங்களுடன் சேராவிடில் சுதந்திரக கட்சிக்குக் கடைசிக் காலம் ஏற்படுவதோடு முற்போக்குத் தலைவர்களுக்கும் கடைசிக்காலம் ஏற்பட்டுவிடுமென்பது உண்மை. முற்போக்குச் சக்திகளுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதை உணர்ந்தே பிரதமர் அவ்வித சக்திகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து முதலாளித்துவத்துக்கு எதிராகச் செயலாற்றி 1956-ல் கிடைத்த பலன்களை ஸ்திரப்படுத்துமாறு கேட்டுள்ளார்.

இப்போதைய நிலையைத் தீர்க்க இரண்டு வழிகள்

(6-ம் பக்கம் பார்க்க)

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

### மணிவாக்கு

சொற்ப நேரத்தையும் கவனமாகப் பயன்படுத்துங்கள். இதன் மூலம் கிடைக்கும் பயன் வியப்பளிக்கும். பொழுதைப் பொன்னுக்கலாம்.

—பிஷப் வால்ஹாம் ஹௌ.

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram. EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு சித்திரை மீ 13 உ (25-4-64)

## ஆஸ்பத்திரி டாக்டர்கள்

நீதி அரசர் தம்பையா அவர்களும், மரண விசாரணை அதிகாரியான அமிர்தலிங்கம் அவர்களும் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியைப்பற்றிக் கண்டித்திருக்கின்றார்கள். மக்களின் உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய விதத்தில் அங்கு டாக்டர்கள் அசிரத்தையாக இருப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர். பொறுப்புள்ள இவ்விரு அதிகாரிகளும் இவ்விதம் பகிரங்கமாகக் கூறியபின் பொது மக்கள், அந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறப் பயப்படுவது இயற்கை.

இந்த ஆஸ்பத்திரிமட்டுமல்ல. டாக்டர்களின் பொது வேலை நிறுத்தத்துக்குப்பிறகுஇலங்கையிலுள்ள அநேகமாக எல்லா ஆஸ்பத்திரிகளிலும் பொதுமக்களிடம் டாக்டர்கள் காட்டும் மனப்பான்மை திருப்திகரமாக இல்லை என்று கூறப்படுகிறது. அவசரகாலச் சட்டம் அமுலுக்குவந்ததால்தான் டாக்டர்கள் தங்கள் வேலை நிறுத்தத்தை முடிக்கவேண்டியதாயிற்று. அத்தகராறுபற்றி பேச்சுகள் நடக்கின்றதெனினும், மனப்போராட்டம் தீரவில்லை. அவசரகாலம் முடிந்துவிட்டதால் டாக்டர்கள் மீண்டும் வேலை நிறுத்தம் செய்வார்களோ என்ற பீதியும் இருந்து வருகின்றது.

டாக்டர்களில் பலர் தங்கள் கடமையை உணர்ந்து அன்புடன் பொதுமக்களுக்குச் சிகிச்சை செய்வதை நாம் அறிவோம். யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் மேலான சிகிச்சை அளிக்கப்படுவதாக ஒரு புகழுமுண்டு. ஆனால் சமீப காலத்திலே பல காரணங்களாலும் பொதுவாக நிலைமை மாறி, ஆஸ்பத்திரி சிகிச்சையில் பொதுமக்கள் நம்பிக்கையைப் பெரிதும் இழந்துவருகிறார்கள். தனிப்பட்ட 'நர்ஸிங்ஹோம்,களில் கட்டணங்கள் பன்மடங்கு அதிகரித்துள்ளதால் செல்வந்தர்களும் அந்தப்பக்கம் போகத் தயங்குகின்றார்கள். ஏழைப் பொதுமக்கள் இதனால் பெரும் சங்கடத்துக்குள்ளாகி இருக்கின்றார்கள். இந்த அவலநிலை மாறவேண்டும்.

இதற்கு என்ன செய்யவேண்டும்; யார் முயற்சி எடுக்கவேண்டும் என்பன முக்கிய கேள்விகள். பொதுவாக ஆஸ்பத்திரி டாக்டர்களின் கோரிக்கைகளில் நியாயமிருக்கிறதா என்பது வேறு விஷயம். அவர்களது தொழிற் சங்கம் வேலைநிறுத்த காலத்தில், பொதுமக்களின் அபிமானத்தையும் ஆதரவையும் பெறுவதற்காகப் பல அறிக்கைகளை வெளியிட்டது. இப்போது பொதுமக்களின் நம்பிக்கை பெரிதும் குலைக்கப்பட்டிருப்பதால், அதேதொழிற் சங்கம் முன்வந்து, ஆஸ்பத்திரி டாக்டர்களின் சார்பாக பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்படும்வகையில் தக்கன செய்யவேண்டும். சம்பள உயர்வு, சலுகை இவற்றைப் பெற்றுத்தருவதைவிட, டாக்டர்களின் மதிப்பைக் காக்கவும், பொதுமக்களின் நம்பிக்கையையும் அபிமானத்தையும் அவர்களுக்குப் பெற்றுத்தரவும் வேண்டியது, அந்த தொழிற் சங்கத்தின் மேலான கடமையும் பொறுப்புமாகும்.

தங்கள் தகராறு திருப்திகரமாகத் தீராத நிலைமையில் டாக்டர்களுக்கு மந்திரிமீதும் அரசாங்கத்தின்மீதும் மனக்கசப்பும், அதிருப்தியும் இருப்பின் அது இயற்கை. ஆனால் இது காரணமாக பொதுமக்களுக்கு எவ்வித பாதகமும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது டாக்டர்கள் மட்டுமன்றி, அரசாங்கத்தினதும் பெருங் கடமையாகும். ஆஸ்பத்திரிகளிலே டாக்டர்கள் செய்வது வைத்திய சேவையேயன்றி வைத்தியத் தொழில் அல்ல. சேவா உணர்ச்சி துரதிருஷ்டவசமாகக் குறைந்து மறைந்துவிடுமாயின், அவை உண்மையில் ஆஸ்பத்திரிகளாக இருக்கமுடியாது. மருந்துகளைவிட, அன்பும் கவனிப்பும்தான் நோய்களைக் குணப்படுத்தக்கூடியது. ஆகவே அரசாங்கத்தின் மீதுள்ள கோபத்தை பொதுமக்கள்மீது காட்டாமல், பொதுமக்களின் நம்பிக்கையை மீண்டும் பெற சிறப்பாக டாக்டர்கள் முற்படவேண்டும்.

தேசிய நன்மையை முன்னிட்டு சாதாரண தொழிலாளரும்கூட வேலை நிறுத்தம் செய்யப்படாதென்று இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் என். எம். பெரேராவே பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்தார். ஆகவே பொதுமக்களுக்கு மிகப் புனிதமான சேவையைச் செய்யும் டாக்டர்கள், வேலை நிறுத்தத்தைப்பற்றி நினைப்பதும் தர்மமன்று. அவர்களது குறைகளை நியாயமான முறையில் சீக்கிரம் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதில் சற்றே தவக்கமேற்படினும், டாக்டர்கள் மனதிலே கசப்பு இல்லாமல் தங்கள் அன்புச் சேவைமூலம் பொதுமக்களின் அவநம்பிக்கையையும் பீதியையும் நீக்க வேண்டும்.

### மிலாத் பிரசுரம

கொழும்பு, வெள்ளி

லக்னோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அபுல் ஹஸன் அலி நத்வியின் 'நற்பணியாற்றிய நபிமணி' என்ற ஆக்கமொன்றை கொழும்பு இஸ்லாமிய நிலையம் விசேட மீலாத் பிரசுரமாக வெளியிடவிருக்கிறது.

பல அரிய கருத்துக்களைத் தாங்கியுள்ள இந் நூல் நபிகள் பிறந்ததின வைபவமாகிய ஜூலை மாதத்தில் வெளியிடப்படும்.

---

### வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் தேர்த் திருவிழா

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் தேர்த் திருவிழா இன்று நடைபெறும். நாளை ஊறணி தீர்த்தக்கட்டத்தில் தீர்த்தத்திருவிழா நடைபெறும். இரவு நெடிய காட்டு இளைஞர்கள் 101 தீப்பந்தங்களைத்தாங்கிய பலூன்களை ஆகாய வீதியில் பறக்க விடுவதன் மூலம் தீர்த்தத்திருவிழாவைச் சிறந்தமுறையில் கொண்டாடவிருப்பதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணம்

# நல்லூர் கைலாச நாதர் பிள்ளையார் கோவில்

வை. முத்துக்குமார சுவாமி

ஓர் ஆண்டுக்கு முன்னர் இக் கோவிலுக்கு என ஒரு தேர் புதிதாக அமைக்கப்பட்டு 14-4-63 அன்று வெள்ளோட்டம் ஓடி, 24-ந் திகதி முதலாவதாக வீதி வலம் வந்தது. இன்று இரண்டாவது முறையாக இக்கோவிலில் தேர் வீதி வருகிறது.

இத் தேர் சிறந்த கலா அம்சங்களை உடையது. தேர் முட்டி மீது அழகான விநாயகர் உருவர் உண்டு. கிழக்கிலும் மேற்கிலும் இருபூத உருவங்கள் உள்ளன இத்தேர் திருவிடை மருதூர் கோவிந்தராசா ஆசாரியரால், சில உதவி ஆசாரியார்கள் உதவியுடன் (உள்ளூர் ஆசாரியார்கள் உட்பட) ஆறு மாதத்தில் அமைக்கப்பட்டது.

தேரில் நடுநாயகமாக நாலு தலைகளையுடைய அயன் மிக அழகாக இருக்கிறது. இரு குதிரைகள் பாய்ந்து கொண்டு நிற்குமாப் போல இருமருங்கும் பாங்காக அமைந்துள்ளன. பல அடுக்குகள் கொண்டது இத் தேர் இக்கோவிலின் வரலாற்றைப் பத்து சித்திரப் படிவங்களில் அடக்கியுள்ளது இத் தேர்.

முதலாவது சிங்கை ஆரியன் முதல் கல் நாட்டல், இரண்டாவது முப்புரங்களுடன் இக் கோவில் அமைக்கப்பட்டது. மூன்றாவது இக்கோவிலைப் போர்த்துக்கீசர் அழித்து ஒழிப்பது, நான்காவது கோயிற் குருக்கள் சிவலிங்கம முதலிய திருவுருவங்களை கோவில் தீர்த்தக் கிணற்றுக்குள் இடும் காட்சி.

ஐந்தாம் சித்திரம் டச்சுக்காரர் கைலாசநாதர் கோவிலில் உள்ள இடித்த கற்களைச் சேர்த்து யாழ்ப்பாணக் கோட்டை அமைத்தல் ஆகும்.

ஆறும் சித்திரம் கைலை விநாயகர் கோவில் இருந்த இடம் மணற் கும்பி என்பதையும் மணற் கும்பியில் இருந்து ஒரு விநாயகர் உருவம் தோன்றுதலும். அதை வில்வம் மரத்தின் கீழ் வைத்து மக்கள் வணங்குதலும்.

ஏழாவது சித்திரமானது நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் ஓலைக் கொட்டில் போட்டுப் பிள்ளையார் கோயிலாகப் புதிது அமைத்து நிருமாணித்தல் ஆகும்.

எட்டாவது சிததிரமானது நாவலர் பெருமானின் தமையனாரின் மகன் உயர் திரு. த. கைலாசபிள்ளை அவர்கள் பிள்ளையாருக்குச் சிறு கோவில் கட்டுவித்தல் ஆகும்.

ஒன்பதாவது சித்திரமாவது உயர் திரு. சுந்தரம்பிள்ளை, குமாரசுவாமிக் குருக்கள், மு. வேலுப்பிள்ளை இன்று உள்ள கோவிலை (இரு கோபுரங்களுடன்) அமைத்தலும், குமாரசுவாமிக் குருக்கள் நித்திய நைமித்தியங்கள் வழுவாது செய்தலும் ஆகும்.

பத்தாவது சித்திரமாவது: சுந்தரம்பிள்ளை அவர்கள் தங்கை ஸ்ரீசபாபதி முதலியார் மாணிக்கம்மா இத்திருப்பணியைச் செவ்வனே செய்து கும்பாபிஷேகம் செய்வித்தல். இவைகளே இக் கோவிலின் வரலாற்றின் முக்கிய கட்டங்கள்.

1945-ம் ஆண்டு இதன் முதற் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இங்கு மூலஸ்தானத்தில் உள்ள விநாயகர் (பழைய கோவிலில் உள்ளது) மற்றைய லிங்கம் உயர் திரு. த. கைலாசபிள்ளை அவர்கள் தங்கள் வீட்டில் வைத்து வணங்கிய லிங்கம்.

கைலைநாயகி (பார்வதி) அம்மன் உருவம் தெற்கே அமைக்கப் பட்டிருக்கிறது. மூன்றாவது வாசலுக்காக ஒரு கொலுமண்டபம் அமைக்க திட்டம் இட்டிருக்கின்றனர் என்று இரண்டாவது குருக்களாகிய பிரதம குருக்களின் மகன் ஆங்கிலம் நன்றாகக் கற்ற குமாரசுவாமிக் குருக்கள் கூறினார். இக் கோவிலுக்குப் பிரதம குருவாக உள்ளவர் குருசுவாமிக் குருக்கள் சென்ற 34 ஆண்டுகளாகக் கடமையாற்றியுள்ளார் என்று கூறினர். இவருக்கு முன்னர் இருந்தவர் இவர் தந்தை குமாரசுவாமிக் குருக்கள். சென்ற நூறு வருடங்களாக இக் கோவிற் திருப்பணியை இக் குடும்பத்தார் செய்து வந்துள்ளனர் 1954-ம் ஆண்டில் இருந்து பொ. இராமலிங்கம் அவர்கள் கோவிலுக்கு அதிபர் ஆக இருக்கிறார்.

தேர்த் திருப்பணி முன்னைநாள் பேராசிரியர் சுந்தரலிங்கத்தாரின் குடும்பத்தாராலும் பொது மக்கள் உதவியாலும் கட்டப்பட்டது என்று குருக்கள் கூறினர். இக்கோவிலில் பத்து நாட்களாகச் சித்திரையில் விழாக்கள் நடைபெறுகின்றன.

இக் கோவிலுக்கென சிறந்த நந்தவனம் உண்டு. இக் கோவிலில், காலை 6 00 10-00 மணிகளிலும் மாலை 5-30, 7-00 மணிகளிலும் தினசரி நான்கு பூசைகள் நடைபெறுகின்றன.

இக் கோவிலில் உள்ள பரிவாரக் கடவுளர்: சுப்பிரமணியர் உருவம் (வள்ளி தெய்வானையுடன்) நால்வர், நவக்கிரகங்கள் நவரவர் என்பன. வைரவரும் முலஸ்தானபிள்ளையாரும் பழைய கோவிலில் உள்ள திருவுருவங்கள் என்பதை குமாரசுவாமிக் குருக்கள் வற்புறுத்தினர்.

பழைய லிங்கம் சாவகச்சேரியில் உள்ள ஒரு கோவிலில் இருக்கிறது என்று குமாரசுவாமிக் குருக்கள் கூறினர்.

இங்கு வாசலுக்குச் சமீபத்தில் ஒரு கேணி காணப்படுகிறது. ஒரு சிறிய மணியும் பெரியமணியும் இக் கோவிலில் உண்டு. இவை பேராசிரியர் மயில்வாகனம் அவர்களால் 1938 வரையில் கொடுக்கப்பட்டது என்பதை அறிந்தேன்.

இக் கோவில் தேர்த்திருப்பணிப் பஞ்சாயத்தார் மங்கையர்க்கரசி குமாரசுவாமி, சபாபதி சோமசுந்தரம், குமாரசுவாமிக் குருக்கள் குருசாமிக் குருக்கள், பொன்னம்பலம் இராமலிங்கம், செல்லப்பா சுந்தரலிங்கம் என்பவர்களே. இத் திருப்பணிநிதி பிரதான காணிக்கையாளர் கனகசபை நாகேந்திரம், சபாபதி சோமசுந்தரம், செல்லப்பா தியாகலிங்கம், இராசேந்திரா குமாரசுவாமி, இலிங்காம்பிகை சச்சிதானந்த என்பவர்கள். நாவலர் தாசன், யாழ்ப்பாணம் நல்லூர் கைலாசநாதர் பிள்ளையார் மான்மியமும் ஞானஞ்சலியும் பாடியுள்ளார்,

இக் கோவிலில் நாவலர் பெருமான் மிகவும் அபிமானங் கொண்டிருந்தார். ஏனெனில் அவர் விட்டுள்ள வண்ணை சைவப்பிரகாசவித்தியாசாலை அடைக்கல நிதி உறுதியில் அவர் பின்வருமாறு (பந்தி 13-ல்) எழுதியுள்ளார்:-

"இவர்கள் ஒவ்வொரு மாதமும் கணக்கெழுதத்தொடங்குமுன் கைலாசபிள்ளையார் கோவிலுக்குப்போய் சந்நிதியிலே அக் கோவில் குருக்கள் முன்னிலையின் நின்று,"யாழ்ப்பாணச் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கும் அதற்குச் சேர்ந்த தர்மங்களுக்கு உரிய பொருள் சிவத்திரவியமாகும். அதை நான் அபகரிக்கமாட்டேன்; பொய்யான கணக்கு எழுதவும் மாட்டேன். அபகரித்தாலும்,பொய்யான கணக்கு எழுதினாலும் கடவுள் என்னைத் தண்டிப்பாராக! என் மனமும் பஞ்சபூதங்களும் திக்குப்பாலகர்களும் சாட்சியாக இருக்குக" என்று சத்தியஞ் செய்துகொள்ளுதல் வேண்டும்."

## ஐயாறன் எழுதுவது

கலை அரசு சொர்ணலிங்கத்தார் நேற்று முன் தினம், தாடி, மீசை, முண்டாசு சகிதமாக 'ஷைலக்'காக நடித்து மகாகவி ஷேக்ஸ்பியருக்குத் தமது அஞ்சலியைத் செலுத்தினார்.

யாழ்ப்பாண மத்தியகல்லூரி திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற விழாவுக்கு ஆவிருபத்தில் ஷேக்ஸ்பியர் வந்து பார்த்திருந்தால்,நமது கலைஅரசுக்கு அவர் நிச்சயம் ஒரு பெரிய 'சபாஷ்' கூறியிருப்பார்.

வயது 75 க்கு மேல்; பற்கள் பல இல்லை; என்றாலும் மேடை மீது அவர் தோன்றி, உணர்ச்சியுடனே பேசியது மிகத் தெளிவாக இருந்தது! பல வருடங்களுக்கு முன் இதே 'ஷைலக்' காக கொழும்பு சைவமங்கையர்கழக மண்டபத்தில் அவர் தோன்றியதை முதல் முதலாகக் கண்டது என் மனக் கண்ணை விட்டு இன்னும் நீங்கவில்லை. வருடங்கள் பல ஓடியும் கூட, கலை அரசின் உணர்ச்சிமிக்க உயரிய நடிப்பும், தோற்றமும் மாறுமல் என்றும் இளமையாகவே இருப்பது மிக மகிழ்ச்சி அளித்தது. அவர் நீடூழி வாழ்க!

* * *

அவருக்குப் பின் நடிக்க இங்கு யார் இருக்கிறார்கள் என்று நீதியரசர் கவலையுடன் கேட்டார். அவர் பல வாலிபர்களுக்கு மேலான பயிற்சி அளித்து, இங்கு அவரது கலைப் பரம்பரையை நன்கு வளர்த்திருப்பதாக மற்றொருவர் தெரிவித்தார்.

'அரிச்சந்திரா' புகழ் வைரமுத்துவை மற்றொரு அன்பர் நினைவுபடுத்தினர். நாடகக் கலைத் திறமைக்கு இங்கு குறைவில்லை. ஆனால் நல்ல தியேட்டர் தான் இல்லை. ஒரு நாடகத்துக்கு ஏற்பாடு செய்து அதை நடத்த வேண்டுமானால் மிகமிகக் கஷ்டம்.

பிரிட்டனிலும், இந்தியா முதலிய நாடுகளிலும் கூட நவீன முறையில் எவ்வளவோ தியேட்டர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு இக்குறை எப்போது நீங்கப் போகிறதோ?

* * *

அன்று ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப் பற்றி ஆசிரியர் சீனிவாசன் அவர்கள் ஆங்கிலத்தில் பேசியது பலரது பாராட்டுதலையும் பெற்றது. கருத்துக்களும், சொற்களும் தங்குதடையின்றி கங்காபிரவாகம்போல்வந்துகொண்டிருந்தன. பல நாடகங்களிலிருந்தும் அவர் பல பகுதிகளை உணர்ச்சியுடன் எடுத்துக் கூறியது நாடகத்தையே பார்ப்பதுபோலிருந்தது! ஒரு மணி பேசினாலும், அதற்குள் முடிந்து விட்டதே என்று தோன்றியது. சென்னை பிரஸிடென்ஸி கல்லூரியிலே, ஆங்கில இலக்கியத்தில் ஆனர்ஸ் பரீட்சையில் முதல் வகுப்பில் முதலாகத்தேறியவராம் அவர்!

ஷேக்ஸ்பியரின் நாடகங்களை ரஷ்ய மாணவர்கள் உற்சாகமாகக் கற்று வருகையில், இலங்கைக் கல்லூரிகளில் அதைப் பகிஷ்கரித்து விட்டோம்! ஆங்கிலத்தில் திறன் குறைந்துவருவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும் தமிழர் ஆங்கிலத்தைக் கற்க வேண்டியது மிக அவசியமென்று வற்புறுத்தினர் நீதியரசா. விசேஷ ஷேக்ஸ்பியர் வகுப்புகளை நடத்தத்தாம் தயாரென்கிறார் ஆசிரியர் சீனிவாசன். இப்பணிக்கு அவரை விடத் தகுந்தவர் இங்கு வேறு யார் கிடைக்க முடியும்?

* * *

தென் அமெரிக்காவைச் சேர்ந்த வெனிசுலாவிலிருந்து 'சாந்திதேவி' என்ற வெள்ளைக்காரப் பெண்மணி (மிஸஸ்

(6-ம் பக்கம் பார்க்க)

# "பூமாவின் கலப்பு அரசாங்கமே தொடர்ந்து பதவியில் இருக்கும்"

## லாவோஸ் வலதுசாரி புரட்சிக்காரர் அறிவிப்பு

### நெருக்கடியைத் தீர்க்க தொடர்ந்து முயற்சிகள்

வியண்டயன், ஏப்.24

லாவோஸில் இளவரசர் சுவர்ணபூமாவின் கலப்பு அரசாங்கம் தொடர்ந்து பதவியில் இருக்கும் என வலதுசாரி ராணுவத் தலைமை அறிவித்திருக்கிறது. ஆனால் கலப்பு அரசாங்கம் தகுதியானவர்களைக் கொண்டு திருத்தியமைக்கப்படும் என நம்புவதாயும், இதை அமுல் நடத்துவதில் புரட்சிசபை ஒத்துழைக்குமென்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த நிபந்தனையை ஏற்குமாறு கேட்டுக்கொள்ளும் பொருட்டு, இளவரசரைச் சந்திக்கத் தாம் முயற்சிசெய்யப்போவதாக வலதுசாரி புரட்சித் தலைவர் அறிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் இளவரசர் சுவர்ணபூமா மீண்டும் மன்னரைச் சந்தித்து லாவோஸ் நெருக்கடி குறித்து விவாதித்தார். துணைப்பிரதமர் ஜெனரல் பூமி நொஸாவானும், பல நாடுகளின் ராஜியத் தூதர்களும் இளவரசருடன் சென்று மன்னரைச் சந்தித்தனர்.

வலதுசாரிப் புரட்சி அரசியல் சாஸனத்துக்கு முரணானது என்றும், சுவர்ண பூமா அரசாங்கமே தொடர்ந்திருக்க வேண்டும் என்றும் மன்னர் உறுதியாக அவர்களிடம் கூறியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

வாஷிங்டனில் ஜனாதிபதி ஜோன்ஸன் பேசுகையில், சுவர்ணபூமா அரசாங்கத்தின் வசமே அதிகாரம் இருப்பதாய் லாவோஸிலிருந்து தமக்கு நல்ல செய்தி கிடைத்திருப்பதாய்க் கூறினார். பூமாவின் அரசாங்கத்துக்கு புரட்சிசபையின் ஆதரவு இருப்பதாயும் கூறினார்.

அமெரிக்கா, லாவோஸ் நிலைமையைக் கூர்ந்து கவனித்துவரும் என்றும் ஜனாதிபதி அறிவித்தார்.

பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. ஆர். ஏ. பட்லர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் பூமாவின் அரசாங்கத்தை நிலைநிறுத்துவதில் பல நாட்டு ராஜதந்திரிகள் ஒற்றுமையாக முயற்சித்துவருவதாகக் குறிப்பிட்டார்.

## பள்ளிகளில் புகைப்பட பாடம்

பான் (டாட்), ஏப்.24

அன்றாடக் கல்வித் திட்டத்தின் ஒரு அம்சமாகவே சுமார் 2 லட்சம் ஜெர்மன் மாணவர் புகைப்படம் பிடிப்பது, திரைப்படம் எடுப்பது இவைகளைக் கற்கின்றனர். மேற்குஜெர்மனியிலுள்ள 33,000 பள்ளிக்கூடங்களில் புகைப்படம் அலம்பித் தயாரிப்பதற்கான இருட்டறை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. உயர்நிலைப் பள்ளிகளில் மட்டுமன்றி ஆரம்பப் பள்ளிகளிலும் புகைப்படம் பிடிக்கும்கலை போதிக்கப்படுகிறது. இத்துறையில் எல்லா நாடுகளைக் காட்டிலும் மேற்கு ஜெர்மனியே முன்னணியிலிருக்கிறது. பள்ளியில் புகைப்படம் எடுப்பதை ஏற்படுத்திய பெருமை இதற்கான ஸ்தாபனத்தையே சேரும். இந்த ஸ்தாபனம் 1953-ல் ஏற்படுத்தப்பட்டது.

## ஐரோப்பிய மெட்டுகளில் தீட்சிதர் கிருதிகள்

திருத்தணி. ஏப். 24

ஸ்ரீ முத்துச்சாமி தீட்சிதரின் 188-வது ஜயந்தி விழாவில், அவரது கிருதிகளில் உள்ள விசேஷங்களை பேராசிரியர் சாம்பமூர்த்தி விளக்கினார்.

முதன் முதலில் தெலுங்கு அகராதியைத் தயாரித்த ஆங்கிலேயர் திரு. பிரௌனின் வேண்டுகோளுக்கிணங்க, தீட்சிதர் சில சமஸ்கிருத கிருதிகளை ஐரோப்பிய சங்கீத மெட்டுகளில் இயற்றி, அவற்றில் தமது முத்திரையையும் இட்டுள்ளார் என்று பேராசிரியர் சாம்பமூர்த்தி கூறினார். உதாரணத்திற்கு சில கிருதிகளையும் அவர் பாடிக் காட்டினார். பின் "ரெபெக்" என்ற ஆங்கில இசைக்கருவியில் ஒரு கிருதியை இசைத்துக் காண்பித்தார்.

## தென் ரொடீஷியா பற்றி யுதாண்ட் குறிப்பு

### பிரிட்டனுக்கு அனுப்பினார்

நியுயோர்க், ஏப். 24

ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட், தென் ரொடீஷிய நிலைமை பற்றி பிரிட்டனிடம் கவலை தெரிவித்திருக்கிறார்.

58 ஆசிய - ஆபிரிக்க நாடுகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்த நாடுகளின் கருத்துக்களையும் அவர் பிரிட்டனுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்.

தென் ரொடீஷியாவில் கைது செய்யப்பட்டிருக்கும் ஜோஷுவா நெகோமோவையும், இதர அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும் என ஐ. நா. ஆசிய - ஆபிரிக்கக் குழு கோரியிருக்கிறது.

இந்த முயற்சி தோல்வியுற்றால் பாதுகாப்புசபைக்கு விஷயத்தைக் கொண்டு வரவும் முடிவு செய்திருக்கிறது.

## ஷேக்ஸ்பியர் கல்லறையில் மாபெரும் மலராஞ்சலி

ஸ்ட்ராட்போர்ட்-அபான்--ஏவோன், ஏப். 24

ஷேக்ஸ்பியர்பிறந்த இடமான ஸ்ட்ராட்போர்ட்- அபான்-ஏவோனில் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் மலர் வளையங்களை புலவரின் கல்லறையில் வைத்தனர். மலர்கள் கல்லறைமீது தூவப்பட்டன. ஆயிரக்கணக்கான மலர் வளையங்கள் குவிக்கப்பட்டன.

ரஷ்யாவில் போல்ஷாய் தியேட்டரில் நடைபெற்ற ஷேக்ஸ்பியர் நிகழ்ச்சியில் பிரதமர் குருஷ்சேவ் கலந்து கொண்டார். ஷேக்ஸ்பியர் தினத்தை முன்னிட்டு மகாராணி ஒரு செய்தி விடுத்திருக்கிறார்.

வில்லியம் ஷேக்ஸ்பியரின் பிறந்ததினத்தை முன்னிட்டு புதுடில்லியில் புத்தகக்கண்காட்சி ஒன்று நடைபெற்றது. பாரத மொழிகளில் ஷேக்ஸ்பியர் நூல்கள் இடம்பெற்றிருந்தன. ஷேக்ஸ்பியர் நாடகமும் நடித்துக்காட்டப்பட்டது.

சென்னையில் கண்காட்சியும், கருத்தரங்கும் சென்னை பல்கலைக்கழக உபவேந்தர் டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியாரினால் திறந்துவைக்கப்பட்டது. ஷேக்ஸ்பியரின் நூல்களை பல தலைமுறையினரும் பாராட்டி வருவதாக டாக்டர் முதலியார் அப்போது கூறினார்.

## அகதிகளுக்கு சாலை அமைப்பு, திட்டவேலைகள்

புதுடில்லி, ஏப். 24

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வரும் அகதிகளிடையே எல்லைகளில் சாலைகள் அமைப்பதற்கும், மாபெரும் திட்ட வேலைகளில், ஈடுபடுத்துவதற்கும் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பேர் கொண்ட அணிகளை அமைக்கத் தாம் திட்டமிட்டிருப்பதாய் அகதிகள் மறுவாழ்விப்பு மந்திரி திரு. மகாவீர்தியாகி கூறினார். அந்தமான், நிக்கோபார் தீவுகளில் நல்ல வாய்ப்புகள் இருப்பதாயும், அங்கும் அவர்கள் தொழிலில் ஈடுபடுத்தப்படுவார்களென்றும் மந்திரி கூறினார்.

சராசரி தினம் ஒன்றுக்கு 200 குடும்பங்கள் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேறுகிறார்கள் என்றும், விடுதலைக்குப்பின் 6 லட்சம் மக்கள் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து திரிபுரா வந்திருப்பதாயும் மந்திரி தெரிவித்தார்.

## ஈதுல் பித்ர் கொண்டாட்டம் முஸ்லிம் தலைவர்கள் செய்தி

புதுடில்லி, ஏப். 24

இந்தியாவில் நடைபெற்ற ஈதுல்பித்ர்கொண்டாட்டத்தின் போது முஸ்லிம்களுடன் ஹிந்துக்களும், சீக்கியர்களும் வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டனர்.

டில்லியில் நடைபெற்ற பிரார்த்தனையில் முஸ்லிம் ராஜியப் பிரதிநிதிகளும், ரஷ்யாவிலிருந்து விஜயம் செய்திருக்கும் முஸ்லிம் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

ஜம்மு-காஷ்மீர் பிரதமர் திரு. ஸாதிக் விடுத்துள்ள அறிக்கையொன்றில்,ஒற்றுமை, சகோதரத்துவம், அறஒழுக்கம், மக்கள் சேவை ஆகியவற்றை இஸ்லாம் போதிக்கிறதென்றும், இதன்படி சகல இனமக்களும் சகோதரர்களாக நடந்து செல்ல வேண்டுமென்றும் கூறினார்.

ஷேக் அப்துல்லா விடுத்த ஈத் செய்தியில் காஷ்மீர் பிரச்னையை விருப்பு வெறுப்பற்ற முறையில் ஆராய வேண்டும். பாகிஸ்தானில் ஒருகோடி ஹிந்துக்களும், இந்தியாவில் 5 கோடி முஸ்லிம்களும் வசிக்கிறார்கள் என்பதையும் அவர் ஞாபகப்படுத்தினார்.

## மேற்கு ஜெர்மனியில் நோய்கள் குறைவு

பான், ஏப். 24

மேற்கு ஜெர்மனியில் 1949-ம் ஆண்டு முதற்கொண்டே நோய்கள் குறைந்து வருகின்றன, என்பது மேற்கு ஜெர்மன் சுகாதார மந்திராலய அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. 1949-ல் 47,880 பேருக்கு 'டிப்தீரியா' என்ற தொண்டைப்புண் நோய் ஏற்பட்டது. 1962-ல் 798 பேருக்கு மட்டுமே இது ஏற்பட்டது. இதே போல் இளம் பிள்ளை வாதம் 9517-லிருந்து 286 பேருக்கு குறைந்து விட்டது. டைபாய்டு நோய் விஷயத்திலும் நோய் கண்டவர்கள் எண்ணிக்கைமிகவும் குறைந்துள்ளது.

## ரூ.120 கோடி சாதனங்கள்

புதுடில்லி, ஏப். 24

சென்ற ஆண்டு ரூ. 120 கோடி பெறுமதியான படை சாதனங்கள் உற்பத்தி செய்யப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

## அதிபர் நாஸர் ஏமனுக்கு விஜயம்

ஸானா, ஏப். 24

ஐக்கிய அராபியக் குடியரசு அதிபர் நாஸர் ஏமன் தலைநகருக்குத் திடீரென விஜயம் செய்திருக்கிறார். இரண்டு துணை அதிபர்களுடன் சென்ற நாஸலை ஏமன் அதிபர் ஸலால் வரவேற்றார். அதிபர் நாஸரின் விஜயத்துக்கான காரணம் அறிவிக்கப்படவில்லை.

ஜனாதிபதி நாஸர் இங்கு பேசுகையில் அராபிய உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பிரிட்டனை வெளியேற்ற வேண்டும் என்றும், இதற்காக ஐக்கிய அராபியக் குடியரசு போராடும் என்றும் அறிவித்தார்.

திரு. ஸலால் பேசுகையில், நாஸரை மாபெரும் தலைவர் என வருணித்தார்.

## தென்வியட்னும் வர்த்தக கோஷ்டி

கல்கத்தா, ஏப். 24

7 பேரடங்கிய தென் வியட்னும் வர்த்தகத் தூதுகோஷ்டி கல்கத்தா வந்து சேர்ந்தது. கடந்த 2 ஆண்டுகளில் இந்தியா-தென்வியட்னும் வர்த்தகம் ஐந்து மடங்கு பெருகியிருப்பதாக தூதுகோஷ்டித் தலைவர் கூறினார்.

## தங்கனீகா-ஸான்ஸிபார்: இணைப்பு ஒருவாரத்தில் பூர்த்தியாகும்?

ஸான்ஸிபார், ஏப். 24

தங்கனீகா அதிபர் நைரேரி நேற்று ஸான்ஸிபாருக்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து, ஸான்ஸிபார்-தங்கனீகா இணைப்பு ஒப்பந்தத்தில் அவரும், ஜனாதிபதி கருமேயும் கையெழுத்திட்டனர்.

இது சம்பந்தமாகத் தாம் விரைவில் அறிக்கை விடப்போவதாய் ஸான்ஸிபார் அதிபர் அறிவித்திருக்கிறார். எல்லாம் சரியாக நடந்தால் இம் மாத இறுதிக்குள் இணைப்பு அமுலாகும் என அறிவிக்கப்படுகிறது.

இணைப்புத் திட்டத்தின்கீழ் தங்கனீகா அதிபர் நைரேரி ஜனாதிபதியாகவும், தங்கனீகா உப அதிபரும், ஸான்ஸிபார் அதிபர் கருமேயும் உபஜனாதிபதிகளாகவும் பதவி வகிப்பர்.

இணைக்கப்பட்ட நாட்டின் மொத்த ஜனத்தொகை 95 லட்சமாக இருக்கும்.

புதிய இணைப்பு ஒப்பந்தம் மண்டலசார்பற்ற கொள்கைக்கு ஒரு வெற்றி எனக் கருதப்படுகிறது.

## பிரிட்டிஷ்-ரஷ்ய வர்த்தக ஒப்பந்தம்

லண்டன், ஏப். 24

பிரிட்டனும் ரஷ்யாவும் 5 ஆண்டு புதிய வர்த்தக ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டிருக்கின்றன. ஏற்கனவே உள்ள ஐந்தாண்டு ஒப்பந்தம் வருகிற ஜூன் மாதம் முடிவடைகிறது.

## ரஷ்யாவில் பென்பெல்லா

மாஸ்கோ, ஏப். 24

ரஷ்ய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் அல்ஜீரியத் தலைவர் திரு. பென்பெல்லா ரஷ்யா வந்திருக்கிறார்.

## தென் வியட்னுமுக்கு சீட்டோ உதவும்

வாஷிங்டன், ஏப். 24

கம்யூனிஸ்ட் கொரில்லாக்களை எதிர்த்துப் போராடும் தென் வியட்னுமுக்கு அமெரிக்கா மேலும் ஆதரவு அளிக்கும் என ஜனாதிபதி ஜோன்ஸன் கூறினார். கம்யூனிஸ்டுகளைத் தடுக்கும் முயற்சியில் சீட்டோ நாடுகள் சிலவும் அமெரிக்காவுடன் சேர்ந்து கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார். மற்றொரு உலகப் போர் தற்கொலையாக முடியும் என்றும் அவர் கூறினார்.

## தொக்லியாட்டி கண்டனம்

ரோம், ஏப். 24

இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. தொக்லியாட்டி சீனாவின் போக்கு அபாயகரமானது எனக்கண்டித்திருக்கிறார். உலக கம்யூனிஸ்ட் நாடுகள் ரஷ்யாவையே ஆதரிப்பதாயும் அவர் கூறியிருக்கிறார்.

## எலிஸபெத்டெய்லர் மீது வழக்கு

நியுயோர்க், ஏப். 24

அமெரிக்க பிரபல நடிகை எலிசபெதடெய்லர் மீதும் அவர் சமீபத்தில் திருமணம் செய்துகொண்ட ரிச்சார்ட் பேர்ட்டன் மீதும் 'கிளியோபாத்ரா' எனும் திரைப்படத்தைத் தயாரித்த 'டுவெண்டியத் செஞ்சரி பாக்ஸ்' ஸ்தாபனத்தார் 5 கோடி டாலர் (சுமார் 25 கோடி ரூபா) நஷ்டஈடு கோரி வழக்குத்தொடர்ந்துள்ளார்கள்.

கிளியோபாத்ரா படத் தயாரிப்பின்போது இந்த இருவரும் அசங்கிதமாகவும் பொறுப்பற்ற முறையிலும் நடந்துகொண்டார்களென குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# பாலைவனத்தை சோலையாக்கும் மாபெரும் திட்டம்

## கடல்நீரில் செயற்கை ஏரி அமைக்க ஜெர்மனியர் திட்டம்

பொன், ஏப். 24

பாலைவனத்தில் கடல்நீரைக் கொண்டு செயற்கை ஏரியை அமைப்பதன் மூலம் அதை நாளடைவில் சோலைவனமாக்க முடியும் என்ற அற்புதத் திட்டம் குறித்து மேற்கு ஜெர்மன் விஞ்ஞானிகள் ஆலோசித்து வருகின்றனர். பெருகிவரும் மக்கள் தொகையினர் பல இடங்களில் பரவி வசிக்க இத்தகைய திட்டங்கள் மிகவும் உதவும். 1969-ம் ஆண்டுக்குள் லிபியா பாலைவனத்தின் ஒருபகுதியில் மத்தியதரைக் கடல் நீரைத் தேக்கி ஏரி அமைப்பது பூர்த்தியாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

லிபியா பாலைவனத்திலுள்ள கட்டாரா பள்ளத்தாக்கில் மத்தியதரைக்கடல் நீரைப் பாய்ச்சி ஏரியாக அமைக்கும் திட்டம் ஒன்றை மேற்கு ஜெர்மன் விஞ்ஞானிகள் 1960-ம் ஆண்டிலேயே வெளியிட்டுள்ளனர். இது அனுபவசாத்தியமா என்பது குறித்து மேற்கு ஜெர்மன் பொருளாதார மந்திராலயம் இப்போது ஆலோசித்து வருகிறது.

இதுவரை உலகில் எங்குமே அமுல்செய்யப்படாத இத்திட்டம்முன்பே அமுல்செய்யப்படாததற்குக் காரணம் இதற்கு வேண்டிய செலவிற்கு பணம் கிடைக்காததுதான். இதைச் செய்து முடிக்க 130 கோடி ஜெர்மன் மார்க்குகள் (சுமார் 160 கோடி ரூபாய்) தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் சில வருடங்களில் லிபியாப் பாலைவனத்தின் ஒரு பகுதி சோலைவனமாகக் காட்சியளிக்கும். இதற்கு மத்தியதரைக்கடல் நீரைக் கால்வாய் மூலம் கொண்டுவந்து செயற்கை ஏரி ஒன்றை நிர்மாணித்தாக வேண்டும். கடல் 70 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. தண்ணீர் தேங்கத்தேங்க ஆவியாக மாறுவது துரிதமாக நடைபெறுமாதலால் இந்த ஆவியாக மாறும் நிலை நிற்கும்வரை கடல்நீர் நிரப்பப்பட்டுக்கொண்டே இருக்கவேண்டும். இதற்கு அநேக வருடங்கள் பிடிக்கும் என்று சொல்லப்படுகிறது. குறைந்தது 75 வருடங்கள் ஆகலாம் என்றும் ஜெர்மன் நிபுணர்கள் கருதுகின்றனர்.

நீரின் பரப்பளவு 12,000 சதுர கிலோமீட்டர்கள் இருக்கும் இந்த ஏரிக்கரையில் ஸீமென்ஸ் கம்பெனி மின்விசை நிலையம் ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

தண்ணீர் தொடர்ந்து ஆவியாகவே மாறுவதன் மூலம் இந்த ஏரியின் சுற்றுப்புற சீதோஷ்ண நிலை கடும் உஷ்ணத்திலிருந்து மாறும். புல், பூண்டு, தழைகள் இவை உற்பத்தியாவதற்கான சூழ்நிலை ஏற்படும். இந்த நிலை ஏற்பட்டபின் மனிதர்கள் சிறுகச் சிறுக இங்கு வந்து குடியேறலாம். ஏரியின் பரப்பு நாளடைவில் விஸ்தரிக்கப்படும். இந்தத்திட்டம் அதாவது கடல் நீரைக் கொண்டு பாலைவனத்தில் ஏரி அமைப்பது 1969-ல் முடியலாம் என்று கூறப்படுகிறது. இதற்குச் சிலகாலம் கழித்தே இங்கே மின்விசை உற்பத்தித் திட்டம் தொடங்கும்.

மக்கள் தொகை பெருகி வரும் இக்காலத்தில் இத்தகைய திட்டங்களை வெற்றிகரமாக அமுல் செய்வதன்மூலம் குடியிருக்க வசதியான இடங்கள் ஏராளமாக ஏற்படும்.

## வீரபத்திரர் கோஷ்டி வெற்றி

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் வீரபத்திரர் விளையாட்டுக் கோஷ்டிக்கும் பண்ணாகம் தெற்கு, ஸ்ரீ முருகன் மாணவர் கழகத்துக்குமிடையே நடைபெற்ற தாச்சிப் போட்டியில் சுழிபுரம் வீரபத்திரர் கோஷ்டி வெற்றிபெற்றது. போட்டி வழக்கம்பரை சனசமூக விளையாட்டுத்திடலில் நடைபெற்றது. போட்டி முடிவின்படி சுழிபுரம் வீரபத்திரர் கோஷ்டி 33 பழங்களையும் ஸ்ரீ முருகன்மாணவர் கோஷ்டி 10 பழங்களையும் எடுத்தது.

## வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நவாலி அர்ச். பீற்றர் கூட்டுறவு மீன்பிடி சங்கத்தினர் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 'காவேரி' என்ற தமது புதியமீன்பிடிப் படகை வெள்ளோட்டம்விட விருக்கிறார்கள்.

## இளைஞர்கழக 8-வது ஆண்டுவிழா

சுழிபுரம், வெள்ளி

சித்தங்கேணி இளைஞர் முன்னேற்றக் கழக 8-வது ஆண்டு விழா இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. மேற்படி விழாவில் 'தமிழரின் வருங்கால வாழ்க்கை' என்னும் பொருள்பற்றி திரு. செ. தனபாலசிங்கமும், 'பாரதி கண்ட இளைஞர் சமுதாயம்' என்னும் பொருள்பற்றி திரு அ. அமிர்தலிங்கமும், 'அன்பர் உள்ளம் அளந்த அண்ணலார்' என்னும் பொருள்பற்றி திரு. க. உமாமகேஸ்வரனும், 'அன்பு வளரும் இன்ப சமுதாயம்' என்னும் பொருள் பற்றி திரு. மு. க. சுப்பிரமணியமும் சங்க அங்கத்தவர் திரு. த. சுப்பிரமணியமும் உரை நிகழ்த்தினர்.

கழகத்தலைவர் சி. இரத்தின சபாபதி வரவேற்புரை நிகழ்த்தினார். இ. சர்வானந்தன் சங்க அறிக்கையை வாசித்தார். இறுதியில் சங்க உறுப்பினர்களால 'என் கடமை' என்ற நாடகம் நடித்துக் காட்டப்பட்டது.

## புங்குடுதீவு கிராமசபைத் தேர்தல்

ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவு கிராமசபைத் தேர்தலில் 12-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட தற்போதைய அங்கத்தவரான வழக்கறிஞர் திரு. பி. கதிரவேலுவும், 7-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட முன்னாள் கிராமசபைத் தலைவர் திரு. ச. அம்பலவாணரும் வெற்றியீட்டியுள்ளனர். இம்முறை புதிய அங்கத்தவர்கள் பலர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

### தேர்தல் விபரம்:

1-ம் வட்டாரம்: திரு. நாகேசு கந்தையா, 2-ம் வட்டாரம்: திரு வி. குமாரசாமி, 3-ம் வட்டாரம்: திரு. எஸ். கருணாகரன், 4-ம் வட்டாரம்: திரு. கே. திருநாவுக்கரசு, 5-ம் வட்டாரம்: திரு. கு. வி. தம்பித்துரை ஜே. பி (போட்டியில்லை), 6-ம் வட்டாரம். திரு. நா. தம்பிப்பிள்ளை, 7-ம்வட்டாரம்: திரு. ச. அம்பலவாணர், 8-ம் வட்டாரம்: திரு. வி. இராசரத்தினம், 9-ம் வட்டாரம்: திரு நல்லதம்பி, 10-ம் வட்டாரம்: திரு. அ. நாகநாதி, 11-ம் வட்டாரம்: திரு. ஆ. கார்த்திகேசு (போட்டியில்லை), 12-ம் வட்டாரம் திரு. பி. கதிரவேலு.

## கர பந்தாட்டம்

உடுப்பிட்டி, வெள்ளி

உடுப்பிட்டி குணசேகரா விளையாட்டுக் கழகத்தினரின் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கரவெட்டி யூனியனுக்கும் வதிரி பொமெர்ஸ் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் இறுதி இரு ஆட்டங்களையும் சுவீகரித்து கரவெட்டி யூனியன் வெற்றியீட்டியது. புள்ளிவிபரம்: கரவெட்டி யூனியன் 3-15-15 வதிரி பொமேர்ஸ் 15-5-9

## மூளாய் இளைஞர் கழகம் வெற்றி

சுழிபுரம், வெள்ளி

மூளாய் இளைஞர் கழகத்துக்கும பொன்னாலை-நெல்லியான் விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற தாச்சிப் போட்டியில் மூளாய்கோஷ்டி மேலதிகமாக மூன்று பழங்களை எடுத்து வெற்றிபெற்றது. போட்டி வழக்கம்பரை சனசமூக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. மூளாய் கோஷ்டி பத்துப் பழங்களையும் பொன்னாலை-நெல்லியான் கோஷ்டி ஏழு பழங்களையும் பெற்றது.


ஹார்லிக்ஸ் அளிக்கும் நன்மைக்கு ஒரு உதாரணம்:

எங்கள் இல்லற வாழ்வு கசந்தது

தளர்ச்சியும் எரிச்சலும் மேலிட வாழ்வில் வெறுப்புத் தட்டியது





நாள் செல்லச் செல்ல எங்களைப் பிணைத்திருந்த அன்புத் தளை தளர்ந்து இருவருமே தனிமையை நாட ஆரம்பித்தோம். இன்பம் நிலவ வேண்டிய இல்லற வாழ்வில் துன்பத்தின் சாயை படர்ந்தது.


ஒரு நாள் டாக்டரின் ஆலோசனையைக் கேட்டதில் எங்களுக்கு நல்ல காலம் பிறந்தது. டாக்டர் சொன்னார்: "சோர்வுப்பிணி, சிடுசிடுப்பு இவை பெரும்பாலும் பலவீனத்தின் அறிகுறிகள்.


தினம் தவறாமல் ஹார்லிக்ஸ் அருந்தி வந்தால் இழந்த சக்தியை மீண்டும் பெற்று சுறுசுறுப்புடன் இருக்க முடியும்."


ஆரம்பத்தில் குணம் சற்று தவக்கமாய்த் தான் தெரிந்தது. பிறகு எங்கள் குடும்ப வாழ்வில் பரவியிருந்த இருள் விலகியது என்று பளிச்சென புலனாகியது. பழைய சுறுசுறுப்பும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன.


ஹார்லிக்ஸ் அளித்த நற்பலனினால் எங்கள் குடும்பத்தில் அமைதி நிலவியது. ஹார்லிக்ஸ் அளிக்கும் புத்துணர்ச்சியை உணர்ந்துள்ள நாங்கள் மீண்டும் பழைய பரிதாப நிலைக்கு உள்ளாக மாட்டோம்!




ஹார்லிக்ஸ் அதிக சக்தி யளிக்கிறது!

# வானொலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

### சனி 25-4-64

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-55 சைவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கண்டதும் கேட்டதும் — செய்திச்சுருள், 7-00 பரமேஸ்வரி விஜயரத்தினம் — பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு — வனவிலங்குகளின் வாழ்க்கைவிதம் — எஸ். நடராஜா, 9-30 வி. சங்கரலிங்கம் — வயலின், 10-00 நேயர் விருப்பம்.

### ஞாயிறு 26-4-64

காலை 6-45 பாமாலை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15, தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-00 பௌத்தவாசகம், 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானஞ்சலி, 9-00 முஸ்லிம் ஞாயிறு பாடசாலை, 9-30 கத்தோலிக்க நிகழ்ச்சி, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 எஸ். எம். முத்ததம்பி — பாட்டு, 5-45 திரை இசை.

இரவு 6-15 ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணியசுவாமி கோவில் நிகழ்ச்சி அஞ்சல், 6-45 பாட்டு, 7-15 ஷேக்ஸ்பியர் தின நாடகம் 'கார்கால கதை' — பாலாம்பிகை நடராஜா, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 மாதர் விருப்பம், 9-45 தேர்ந்த இசை, 10-00 நிலையஒலிப்பதிவுகள்.

## திருச்சி

### சனி 25-4-64

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 எச். எஸ். மத்வாச்சார் — கோட்டுவாத்தியம்.

பகல் 1-00 பிள்ளைக்கனி அமுது, 1-20 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 எச். எஸ். மத்வாச்சார் — கோட்டு வாத்தியம்.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 வாத்திய இசை.

இரவு 6-15 செய்திக்குறிப்புகள், 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 அழைப்பு, 8-00 இசைக்கோவை, 8-40 தேசபக்திப் பாடல்கள், 9-15 இசைமாலை, 9-30 அகிலபாரத சங்கீத நிகழ்ச்சி — த்வாரம் வேங்கடசாமி நாயுடு — வயலின்.

### ஞாயிறு 26-4-64

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு. 7-00 துதிப் பாடல்கள், 7-30 கவிகுஞ்சரி பாரதியார் பாடல்கள், 8-15 சேலம் ஜி. தேசிகன் — பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி: கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 2-45 வானிலை அறிவிப்பு — மெல்லிசை, 3-00 எம். ஏ. வேணுகோபால் — பாட்டு.

மாலை 5-15 வாத்திய இசை, 5-45 இசைப்பயிற்சி.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 அரசியல் அறம், 7-45 திருவாளப்புத்தூர் கிருஷ்ணமூர்த்திபிள்ளை — வயலின், 8-45 குரல்இசை, 9-15 தேசபக்திப்பாடல்கள், 9-45 அருணகிரிநாதர் இசைவிழா, 10-35 அருணகிரிநாதர் இசை விழா.

---

வெற்றிகரமான 5வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) விஜிதா (ஹட்டன்)



எம். ஜி. ராமசசந்திரன்—பி. சரோஜாதேவி நடித்த

**பெரிய இடத்துப் பெண்**

3வது வெற்றிகரமான வாரம்!

மைலன் (கொழும்பு) நவா (கொம்பனித் தெரு)

மற்றும் 5 திரைகளில்

எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி புஷ்பலதா — கருணாநிதி நடித்த

**பணம் பந்தியிலே**

---

# பாரதிதாசனுக்கு அனுதாபம்

உடுப்பிட்டி, வெள்ளி

"ஒவ்வொரு தமிழ் மகனிடமும் தன்மான உணர்வைத் தட்டியெழுப்பிய புரட்சிப் பாவலன் பாரதிதாசனின் இறப்பு தமிழினத்திற்கே மாபெரும் இழப்பு. தாழ்ந்து கிடக்கும் தமிழ்மொழி தலைதூக்க முனையும் இந்நேரத்தில் கவிஞர்களும், கலைஞர்களும் எம்மை விட்டுப்பிரிந்து விட்டார்கள். நல்லவர்களை இயற்கை வாழ விடுவதில்லை."

கவிஞர் பாரதிதாசனின் மறைவு குறித்து நெல்லை தமிழ்க் கணற் கலை மன்றத்தினரால் நெல்லியடி சனசமூக நிலையத்தில் நடாத்தப்பெற்ற அனுதாபக்கூட்டத்திற்குத்தலைமைவகித்த திரு. செ. சுவர்ணராசா மேற்கண்டவாறு கூறினர்.

இளங்கவிஞன் திரு. குணேந்திரராசா, திரு. ம. துரைசிங்கம் ஆகியோரும் பேசினர்.

செயலாளர் திரு. தி. சோதிசிங் நன்றியுரை நவின்றார்.

# கடுகதி சுற்று காவல் ஏற்பாடு

நல்லூர், வெள்ளி

வடபகுதியைச் சுற்றியுள்ள கடலில் கடுகதிச் சுற்றுக்காவலுக்கு இயந்திரப் படகுகளை உபயோகிக்கவிருப்பதாக அறியப்படுகிறது. கடுகதி சுற்றுக் காவல் இயந்திரப்படகுகளை வெளிநாடுகளிலிருந்து வருவிப்பது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருவதாக அரசாங்க செய்திப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடை செய்யுமுகமாக புதிய நிறுவனம் ஒன்றினை அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அச் செய்தி தெரிவிக்கிறது.

கப்பற்படையினர் துறைமுகத்தைச் சுற்றுக்காவல் செய்வதற்கும், சிறு படகுகளில் வந்து சேரும் மக்களின் உண்மைகளை குடிவரவு உத்தியோகத்தர்கள் கண்டறிவதற்கு உதவும் திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ள தாகவும் தெரிகிறது.

# சட்டவிரோதமாக காடுகள் அழிப்பு

ஹொரணை, வெள்ளி

இங்கிரிய மாவட்டத்தில் ஏறத்தாழ 1000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள முடிக்குரிய வனமான காடு சட்டவிரோதமாக அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்த மாவட்டத்திலிருந்து மாத்திரம் ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான மரங்கள் சேனைச்சாகுபடி செய்வோரால் தறிக்கப்பட்டுள்ளன. காட்டிலாகாவினர் இதுபற்றி எதுவித அக்கறையும் செலுத்தவில்லையென்றும் 1963-ம் ஆண்டு இறுதிவரை இந்தப்பகுதியில் இயங்கிவந்த காட்டிலாகா காரியாலயம், இந்த ஆண்டு ஜனவரி வரை மூடப்பட்டது என்றும் அறிவிக்கப்படுகிறது. இந்த நிலை நீடிக்குமாயின் காட்டுப்பிரதேசம் என ஒன்று இங்கில்லாமலே போகலாம்.

# சிரமதானம்

உரும்பராய், வெள்ளி

உரும்பராய் இந்துக்கல்லூரி விளையாட்டுத்திடலை திருத்தும் வேலையில் கல்லூரி பழைய மாணவர்களும், கல்லூரி மாணவர்களும் ஞாயிற்றுக்கிழமை காலை சிரமதானம் மேற்கொள்வர்.

---

**REGAL — JAFFNA**
**NOW SHOWING**
Daily 3 Shows Sats.&Suns. Four
RICHARD BASEHART
DON TAYLOR
in
**The Savage Guns**
(Metroscope - Metroscolur)

---

# யாழ்ப்பாணம் மாநகரசபை கேள்விப்பத்திரம்

1. பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரிடமிருந்து 4-5-1964 நண்பகல் 12 மணிவரை முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் பிரதியுடன் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

(a). 12 அங்குல அகலமும், 310 அடி நீளமும் உள்ள சிமெந்து வடிகால் ஒன்று 17-ம் வட்டாரத்திலுள்ள நாவாந்துறை வீதியில் புன்னாலை ரோட்டிலிருந்து மயான ரோட் வரையும், குறுக்குத்தெருக்களுக்குப் பக்கமாகவும் கட்டுதல்.

(b). ஆஸ்பத்திரி கிழக்குப் பகுதியில் தாதிமார் விடுதிக்குப் பக்கத்தால் செல்லும் கால்வாய்க்கு அடியில் சிறிய பள்ள வடிகால் அமைத்தலும், கால்வாய்க்கு வழிவகுத்து சிமெந்து கொங்கிறீட் புளொக் கட்டுதலும்.

(c). மீனாட்சியம்மன் கோவில் வீதியில்தடுப்புச் சுவர்கட்டுதல்.

2. 2-5-64 நண்பகல் 12-00 மணிவரை திருப்பிப்பெறக் கூடிய கேள்விப்பத்திரக் கட்டுப் பணமாக ரூபா ஐம்பதும் (50-00) ஒவ்வொரு கேள்விப் பத்திர விண்ணப்பத்திற்குரிய பணமாக ரூபா ஐந்தும் (5-00) செலுத்தி மாநகர சபை மராமத்து என்ஜினியரிடமிருந்து கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது கேள்விப்பத்திரதாரர் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர். மாநகர சபை ஆணையாளர் அலுவலகத்தில் (பந்தி 1) மேல் குறிப்பிட்ட திகதி, நேரத்தின்படி அவைகள் திறக்கப்படும்.

4. மேலும் விபரங்களை காரியாலய நேரத்தில் மாநகர சபை மராமத்து என்ஜினியரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பம்: டி. டி. ஜெயசிங்கா,
மாநகர சபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை மண்டபம்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
21-4-64. 335

# யாழ்ப்பாணம் மாநகரசபை கேள்விப்பத்திரம்

அரசாங்க இலாகாக்களில் அல்லது ஸ்தலஅதிகாரிகளிடம் ரூ. 100,000ம் அதற்கு மேலும் பதிவுசெய்துள்ள, பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரரிடமிருந்து கீழ்க்காணும் வேலைகளுக்கு 1964-ம் ஆண்டு வைகாசி மாதம் 6-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

யாழ்ப்பாணம் மாநகரசபை காரியாலயத்திற்கு மேலதிக இடவசதி.

2. 1964-ம் ஆண்டு மேதாதம் 4-ந் திகதி பிற்பகல் 3-00 மணிவரை கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூ. 100/-ம் கேள்விப்பத்திர விண்ணப்பத்திற்கு ரூ. 5/-ம் செலுத்தி மாநகர சபை மராமத்து என்ஜினியரிடமிருந்து கேள்விப்பத்திர விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர விண்ணப்பத்திற்கான பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. ஆனல் தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரதாரர் ஒப்பந்தம் செய்யப்பட்டபின் கட்டுப்பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

3. மேற்கொண்ட விபரங்களை காரியாலய நேரத்தில் யாழ்ப்பாணம் மாநகரசபை மராமத்து என்ஜினியரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

டி. டி. ஜெயசிங்கா,
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை மண்டபம்,
யாழ்ப்பாணம்.
20-4-64. 336

---

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

---

# Important Announcement
## Secretarial and Accountancy Tutory

1. The above institute also provides tuition for Intermediate Examination of the Institute of Bankers to be held in September.

2. Applications for all courses inclusive of the Intermediate of Cost and Works Accountants and Chaartered Secr etaries will be finalised before 30th instant.

3. Failing accomodation in the morning or After-noon Sessions, accomodation can be provided in the evening courses which will be from 5 — 7 p.m.

4 The composite fees per month for Secretaries Intermediate is Rs 50/-, for cost and Works Rs 60/- and for Banking Rs. 40/- The fees per subject is Rs 15/-.

Contact Registrar: Kumaraswamy Buildings, Opposite Bus Stand. Power-House Road, Grand Bazaar, Jaffna. 257

# யாழ்நகர் கஷ்ட நிவாரண பாதுகாப்புச் சங்கத்தின் விசேஷ அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் 15—16-வது ஆண்டுப் பொதுக்கூட்டம் 14-3-64-ல் கூடி ஓர் புதிய நிருவாகத்தினை தெரிவுசெய்துள்ளது. இச் சங்கம் கடந்த 15 வருடங்களாக நல்ல முறையில் நடைபெற்றுவந்திருக்கின்றது. இனிமேலும் இச் சங்கம் திறம்பட நடைபெறுவதற்கு அங்கத்தவர்கள் தங்கள் தங்கள் சந்தாவையும் மரண சேவைப்பணத்தையும் உடனுக்குடன் கட்டும்படி வேண்டுகின்றேன். இ. மு. போல்பிள்ளை, காரியதரிசி. 337

## வரி விளம்பரம்

### தொயவு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம. மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணாநந்த கைலாயபிள்ளையார் கோண்டாவில் யாழ்ப்பாணம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பெரியகலட்டி வீதியில் அருமையான வீட்டுத் தளபாட நிலையம் விற்பனைக்கு இருக்கிறது. காலை 9-00 மணியிலிருந்து மாலை 5-00 மணி வரை நாதன், 82, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில்விசாரிக்கவும். 253

### விற்பனைக்கு

EY 5350 Jawa 2. 5, நல்ல நிலைமையிலுள்ள மோட்டார் சயிக்கிள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு றேடியோ லைன்ஸ், 13, யுபிலி பசார் (ராணி தியேட்டருக்கு அருகாமை) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 256

### தேவை

அனுபவமுள்ள ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியருக்கு வேலை தேவை. வயது 35. கணக்கு, வங்கி, மனேஜர், லிகித வேலைகளில் தேர்ச்சி பெற்றவர்.
C/o ஈழநாடு.
251

### புதுடயர்கள் விற்பனைக்குண்டு

'பயர்ஸ்ரோன்' 34 X 7-10 இழை டயர்கள் எமது வாடிக்கைகாரர்களுக்கு பதிவு செய்து கொடுக்கப்படும். ராமகிருஷ்ணா, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன்: 7179. 260

அநுராதபுரம்

# விவேகானந்த மண்டபம் சிறிதளவே பூர்த்தி

## பண நிலையே காரணமாம்

அனுராதபுரம், வெள்ளி

இங்குள்ள விவேகானந்த சபை அநுராதபுரத்தில் வாழும் தமிழ் மக்களின் கல்வியில் நாட்டங்கொண்டு அநுராதபுரம் விவேகானந் விவேவித்தியாலயத்தைப் பெரும் பணச் செலவில் நிர்மாணித்து நடாத்தி வந்தது. அண்மையில் அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரித்தபோது இப்பாடசாலையையும் எடுத்துக்கொண்டது.

விவேகானந்த வித்தியாலயம் கல்விப் பணியைமாத்திரமல்லாது இலங்கைவாழ் தமிழ் மக்கள் அனுராதபுர நகரைப் பார்வையிட வரும்பொழுதெல்லாம் தங்கிச் செல்லக்கூடிய வசதியான இடமாகவும் இருந்தது, அரசாங்கம் வித்தியாலயத்தைப் பொறுப்பேற்ற பின்னர் அவ்வசதிகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டுவருவதாக அறியப்படுகிறது.

தமிழ் பேசும் மக்களின் நன்மையைக் கருதி புதிய நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் கதிரேசன் கோவிலுக்குப் பக்கத்தில் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட நிலத்தில் விவேகானந்தசபையார் விவேகானந்தசபை மண்டபத்தைக் கட்டும் முயற்சியில் ஈடுபட்டு ஒரு சிறு பகுதிமட்டுமே இதுவரை பூர்த்தி செய்துள்ளனர். பெரிதாகத் திட்டமிட்டு சிறிதாக முடித்திருப்பது சபையின் பொருளாதார நிலைமையினால் தானென்று சபைக் காரியதரிசி கூறினர். திட்டமிட்டபடி மண்டபத்தைப் பெரிதாக அமைப்பதற்கு இலங்கைவாழ் தமிழ் மக்களின் உதவியை நாடி நிற்பதாகவும் அவர் கூறினர்

# கூட்டுசேரும் முயற்சியில் புதிய திருப்பம்

கொழும்பு, வெள்ளி

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியுடன் இடதுசாரி ஐக்கிய முன்னணி கூட்டுச் சேர்வதில் ஒரு புதிய திருப்பம் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் சேர்வது குறித்து அரசாங்க பார்லிமெண்டரிக் குழுவில் ஏகோபித்த முடிவு இல்லாதுவிடில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் தேர்தல் ஒப்பந்தமொன்று செய்து கொள்ளக் கூடுமென நம்பப்படுகிறது. இருசார்பினரும் ஏற்றுக் கொண்ட நிபந்தனைகளுக்கமைய இந்த ஒப்பந்தம் உருவாகலாம்.

இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச் சேர்வதை எதிர்க்கும் அரசாங்க எம்.பி.க்கள் தேர்தல் ஒப்பந்தம் செய்து கொள்வதை வரவேற்பதாகத் தெரிகிறது.

கூட்டு அரசாங்க முயற்சியை ஆதரிப்பவர்கள் இந்த முயற்சி வெற்றி பெறும் என நம்பிக்கைகொண்டிருப்பதாகவும் இதனை எதிர்ப்பவர்கள், சுதந்திரக் கட்சி அங்கத்தவர்கள் எல்லோரும் ஏகோபித்து கூட்டு அரசாங்கம் அமைப்பதற்கு இணக்கம் தெரிவித்தாலன்றி பிரதமர் இதற்குச் சம்மதிக்கமாட்டார் என கருதுவதாகவும் அறியப்படுகிறது. சந்திராகுணசேகரா இதுபற்றிக் குறிப்பிடுகையில் இன்னும் இரு தினங்களில் கூட்டு அரசாங்கம்பற்றிய ஒரு முடிவு செய்யப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

# பொங்கல் மகோற்சவம்

கிளிநொச்சி, வெள்ளி

இரணைமடு கனகாம்பிகை அம்பாள் ஆலயத்தில் சித்திரை பௌர்ணமியிலன்று 26-4-64 இரவு விசேட பொங்கல் மகோற்சவம் நடைபெறவிருக்கிறது. இதற்கென அன்று மாலை 5 மணி தொடக்கம் கரைச்சிப்பகுதியில் எல்லாவிடங்களிலுமிருந்து ஆலயத்துக்கு இ. போ. ச. பஸ் போக்குவரத்து விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. அன்றிரவு அளவையூர் சஞ்சீவி திரு.சி. விநசித்தம்பி "காரைக்கால் அம்மையார்" என்ற பொருள் பற்றி கதாப்பிரசங்கம் செய்வார். மறு நாட்காலை இரணைமடுக் குளத்திக் தீர்த்தமாடும் வைபவம் நடைபெறும். கனகாம்பிகை அம்பாள் இரணைமடுக் குளத்தின் இடக்கரையில் கோயில்கொண்டருளிய காலந்தொட்டுக்குளத்தில் நீர் வற்றாது நிரம்பியிருப்பதால் இப்பகுதி மக்களின் வாழ்வு சுபிட்சம் பெற ஏதுவாயிருக்கிறதென்றும் அது அம்பாளின் அனுக்கிரகமே என்றும் நம்பப்படுகிறது

# ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆல்கா மாகோ) (45) சென்ற 14 மாதங்களில் ஜப்பான், இந்தியா முதலிய நாடுகளில் தனியே சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு இப்போது இங்கு வந்துள்ளார்.

நயினாதீவிலே மூன்று நாட்கள் தங்கி, கோவிலில் அமர்ந்து தியானம் செய்தாராம். இந்தியாவிலே சுவாமி சிவானந்த ஆசிரமம், ஆனந்தமயி ஆசிரமம் முதலிய இடங்களில் தங்கி மேலான ஆத்மீக அனுபவம் பெற்றதாயும், ஆத்மீகத்துறையிலே உலகுக்கு இந்தியாதான் மேலான வழிகாட்டியாக இருப்பதாயும் பெரிதும் பாராட்டினர். கேட்க மிக மகிழ்ச்சியாக இருந்தது.

* * *

பண்ணின் இன்மொழி கேட்
கும் பரமனை
வண்ண நன்மலரான் பல
தேவரும்
கண்ணனும் மறியான் கடம்
பந்துறை
நண்ண நம்வினை யாயின
நாசமே
— திருநாவுக்கரசர்

# கரைச்சி கி. ச. தேர்தல்ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

கரைச்சி கிராம சபை அங்கத்தவர்களின் பதவிக்காலம் 1965-ம் வருடம் ஜனவரி 31-ம் திகதி முடிவடையுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களது பதவிக்காலம் இந்தவருடம் ஜூன் மாதம் 30-ம் திகதி முடிவடைய இருந்தது. ஆனால் ஸ்தல ஸ்தாபன உள்விவகார அமைச்சரின் உத்தரவின் பேரில் மேற்கண்வாறு மாற்றப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்த வருடம் ஜூன் 30-ம் திகதியோ அதற்கு முன்னரோ நடைபெறவிருந்த கிராமசபைததேர்தலுக்காக மேற்கொள்ளப்பட்டு வந்த வேலைகள் யாவும் கைவிடப்பட்டுள்ளன. 1965-ம் வருடம் ஜனவரி 31-ம் திகதியன்று நடைபெற விருக்கும் தேர்தலுக்கான வேலைகளே கவனிக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# தனிச் சிங்களச் சட்டம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களுக்கு ஏமாற்றம் ஏற்படுவதில் வியப்பில்லை ஏனெனில் நாட்டின் முந்திய அரசாங்கங்கள் தமிழை நாட்டின் ஒரு தேசீய மொழியாக அங்கீகரித்திருந்தன இதை ஞாபகப்படுத்தி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் திரு. கோடீஸ்வரனின் வழக்கறிஞர் 'தமிழர்களின் கவலையை' எடுத்துரைத்தார். சில சந்தர்ப்பங்களில் சட்டவிதிகளின் பார்லிமெண்டரி சரித்திரத்தை எடுத்துக் காட்டி இவ்வித சட்டத்தை சினங்கொண்டு தாக்கிப் பேசினதுண்டு. திரு. கோடீஸ்வரனின் சம்பள உயர்வை நிறுத்த அரசாங்கத்துக்கு உரிமையுண்டா என்பதே நீதிமன்றத்துக்குத் தேவையான தாகும்.

திரு. கோடீஸ்வரன் தாக்கல் செய்த முறைப்பாடுகளையும் அவரின் சம்பள உயர்வை தடைசெய்ய அரசாங்கத்துக்கு உரிமை உண்டா என்பதையும் அறிவதற்கும் இலங்கையில் அரசாங்கத்துக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் எவ்வித தொடர்பு உண்டு என்பதை ஆராயவேண்டியதவசியம் கோர்ட்டில் அமுல் செய்யக்கூடிய விதத்தில் அரசாங்கத்துக்கும் அதன் ஊழியர்களுக்கும் எவ்வித தொடர்பும் சட்ட உருவில் இல்லைஎன டெபியூட்டி சொலிஸிட்டர் ஜெனரல் தெரிவித்தார். எனவே இலங்கையில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அரசாங்கத்தின் தயவிலேயே தங்கள் தங்கள் சம்பளத்துக்கு தங்கியிருக்கவேண்டியுள்ளது.

சிங்கள அமுல் கூடாத சட்டவிதி என்பதும், அது அரசியல் சட்டத்தின் 29-ம் பகுதியின் 2-ம் அம்சத்துக்கு எதிரானதென்பதும் இதனால் தான் சிங்களத்தில் தேவையான தேர்ச்சி பெற மறுக்கும் சமயத்தில் தனது சம்பளஉயர்வை நிறுத்தி வைக்க அரசாங்கத்துக்கு அதிகாரமில்லை என்பதுமோ வழக்காளியின் குற்றச் சாட்டுகளாகும்.

இருபத்தொன்பதாவது இலக்கச் சட்டத்தின் ஒரு ஷரத்தின்படி நாட்டிலுள்ள குறிப்பிட்ட ஒரு சமூகத்தினரோ அல்லது மதத்தினரோ மற்றையசமூகத்தினரிலும் பார்க்க அதிகமான பொறுப்புக்களை அல்லது தங்களுக்குச் சாதகமான செயல்களைப் புரியச் சட்டம் இடம்கொடுக்கவில்லை. மற்றைய சமூகத்தினரிலும் அல்லது மதத்தினரிலும் பார்க்கக் குறிப்பிட்ட அந்தச் சமூகத்தினர் அல்லது மதத்தினர் தனிச் சலுகைகளையோ அல்லது மற்றைய சமூகத்தினர் அல்லது மதத்தினரிலும் பார்க்கத் தனிப்பட்டமுறையில் விசேஷ சலுகைகள்பெறவோ இச்சட்டம் இடங்கொடாது.

இருபத்தொன்பதாவது சட்டவிதிகள்; குறிப்பிட்ட ஒரு மதத்தினரோ அல்லது சமூகத்தினரோ செயலற்றுப் போகவோ அல்லது கட்டுப்படவோ இடங்கொடுக்கவில்லை.

மேற்கூறப்பட்ட சட்டத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவின் இரண்டாவது ஷரத்தின்படி முரணான சட்டம் எதுவும் செல்லுபடியாகாது.

சுற்றுநிருபங்களுடன் அரசகரும மொழிச் சட்டத்தைச் ஒப்பிட்டி வாசிப்பவர்கள் எவரும் ஒரு முடிவுக்கு வரமுடியுமாவென்று நான் கருதவில்லை. ஆனால் அரசாங்க ஊழியர்கள் சிங்களத்தில் கடமையாற்ற முடியாதென்று கருதியதால் தான் அவர்களைச் சிங்களத்தில் கடமையாற்றும்படி அரசாங்கம் முன்னதாகவே கேட்கவில்லை என்பதே இதற்கொரு காரணமாகுமென்பதைத் தவிர வேறு எந்த விதமாகவும் இதைக் கருதமுடியாது. உத்தியோக மொழிச் சட்டத்தையும் கவனிக்காமல் சேவை ஒப்பந்தத்தை மாற்றும் அதிகாரம் அரசாங்கத்துககு இருக்கிறதென்பதை வைத்துக் கொண்டே இச்சுற்றுநிருபம் வழங்கப்பட்டது என்பதையே இதனால் கருதக்கூடியதாக இருக்கிறது.

இச்சுற்றுநிருபம்எந்தக் காரணங்கொண்டு வழங்கப்பட்டதென்பதுகுறித்து திறைசேரிக் காரியதரிசி எதுவும் தெரிவிக்காததால் உத்தியோக மொழி அமுலுக்கான தேவைகள் பற்றி நான் எதையும் ஏற்றுககொள்ளத் தயாராகவில்லை.

அரசாங்க சேவையில் கோடீஸ்வரன் சேர்த்துக் கொள்ளப்பட்டதன்மூலம் அவர் ஆங்கிலத்தில் கடமையாற்ற வேண்டுமென்பது அத்தியாவசியமாகக் கருதப்பட்டது. அவரின் சேவை ஒப்பந்தத்திலும் இது தெரிவிக்கப்பட்டிருந்தது. அரசகரும மொழிச் சட்டத்தை அமுல்செய்யும் முன் அவர் சிங்களத்தில் தேர்ச்சியடைந்திருக்கவேண்டிய அவசியமெதுவும் ஏற்படவில்லை. சிங்களத்தில் சடமையாற்றும்படி அவரைக் கோருவதன்மூலம் அவரின் சேவை ஒப்பந்தத்தில் ஒரு அம்சத்தை மாற்றலாம். ஆனால் சேவை ஒப்பந்தத்தையே மாற்றிவிட முடியாது.

சேவைக் காலம் பற்றிய ஒப்பந்தத்தில் சில அம்சங்களை மாற்றுதல் செய்யலாம் என்பதை வைத்துக்கொண்டு மூலமான ஒப்பந்தத்துக்குப் பதிலாக வேறொரு புதிய ஒப்பந்தத்தை உத்தியோகஸ்தரின் சம்மதம் இன்றி அரசாங்கம் இயற்றமுடியாது.

தனது திறமையையும், ஆற்றலையும் உபயோகித்து திரு. கோடீஸ்வரன் தான் செய்த வேலைக்காக பெறும் சம்பள உயர்வை கேகாலே அரசாங்க அதிபர் கொடுக்காமல்விட்டது சுற்றுநிருபத்தின் படி பிழையானது என நான் முடிவுக்கு வந்துள்ளேன்."

# இலங்கரத்தின...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்டு. இராணுவச் சட்டத்தைப் பிரகடனபபடுத்தி துப்பாக்கிமுனையில் வேலைசெய்விப்பது ஒன்று. தொழிலளர்களுக்கும் முற்போககுவாதிகளுக்கும் நிலைமையை விளங்கப்படுத்தி அவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவது மற்றது. முதலாவதைச் செய்விப்பவர்களே அதை எதிர்நோக்க ஆயத்தமாக இருக்கவெண்டும்.

ஊர்காவற்றுறை, வெள்ளி

சரவணைக் கிராமத்தைச் சேர்ந்த சின்னமடுச் சேரியில் வசிக்கும் அந்தோனி பேதிறு என்பவர் புற்று நோயால்பீடிக்கப்பட்டு காலமானார்.

# அனுதாபம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

நீர்கொழும்பு வாசியும் ஊர்காவற்றுறை சுருவிலைச் சேர்ந்தவருமான காஞ்சென்ற சமாதான நீதிபதி திரு. இ. நல்லதம்பியின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று சரவணை ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமிகோவில் காரிய நிர்வாக சபைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது'

# ஸ்ரீ மணிபாகவதர் கதாகாலட்சேபம்

யாழ்ப்பாணம், சனி

நாளை சித்திரா பௌர்ணமியன்று நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் காலை 6 மணி முதல் சகஸ்ரநாம சங்காபிஷேகம்.

மாலையில், வண்ணை [illegible] கோயிலில் சுவாமி அம்ப[illegible]குச் சந்தனங்கிக்காட்சி. 6மணி முதல் முத்தமிழ்மணி ஸ்ரீ மணி பாகவதரால் "குமரகுருபர சுவாமிகள்" சரித்திர சங்கீத கதாகாலட்சேபம்.

# இன்று

நீர்வேலி கந்தசுவாமிகோவில் ரதோற்சவம். இந்த உற்சவத்தை முன்னிட்டு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

•

கரவெட்டி வெல்லன் பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா இன்று நடைபெறும்.

•

"சோவியத் அனுபவங்கள்" என்னும் பொருள்பற்றி யாழ். பிரதேச கம்யூனிஸ்ட் தலைவர் திரு. வி. ஏ. கந்தசாமி யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 4-30 மணியளவில் சொற்பொழிவாற்றுவார்.

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்னை சைவசித்தாந்த மகாசமாஜத்தார் அகில இலங்கை சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கத்தின்மூலம் நடத்தும் சைவப் புலவர் பரீட்சை வகுப்புகள், சங்கத் தலைவர் வித்துவான் வ. செல்லையா தலைமையில் வண்ணார்பண்ணை நாவலர் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

# 'தியாகம் மூலம் சோஷலிஸம்'

உடுப்பிட்டி, வெள்ளி

நெல்லியடி கம்யூனிஸ்ட்வாலிபர் சங்கத்தின் மேதின செயல் கமிட்டிக் கூட்டம் திரு. கி. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்ட யாழ் பிரதேச கம்யூனிஸ்ட் தலைவர் திரு. வி. ஏ. கந்தசாமி தமது சோவியத்அனுபவங்கள்பற்றிப் பேசுகையில் கூறியதாவது:-

சமீபத்தில் சோவியத் யூனியனின் மகத்தான தியாகங்களினால்தான் சரியான சோஷலிஸஅமைப்புஏற்பட்டுள்ளது."

யுத்தம் ஏன் வருகிறது? ஏகாதிபத்திய நாடுகளில், முதலாளித்துவத்தின் நெருக்கடியைத் தாங்க முடியாமலேயே யுத்தம் வருகிறது உண்மையான மாக்ஸிச லெனினிசத்தை கடைப்பிடிக்கும் நாம் தான் உண்மையான சோவியத் நண்பர்கள். உண்மையான மாக்சிச லெனினிசம்தான் புரட்சிக்கு வித்து. தொழிலாளர் இல்லாமலேயே சோஷலிஸ அரசாங்கம் அமைக்க திரிபுவாதிகள் விரும்புகிறார்கள். இன்று தொழிலாளர் தலைமையில் தான் விடுதலைப் போராட்டம் நடைபெற வேண்டும் என்ற கட்டத்தில் எமது அரசாங்கம் வந்துள்ளது. தொழிலாளர் சக்திதான் விடுதலையின் மூச்சு."

வீடு வாடகைக்கு

கே. கே. எஸ். வீதியில் 504-ம் நம்பர் (தட்டாதெரு) வீடு (எல்லா வசதிகளுடன்) வாடகைக்கு இருக்கிறது. விபரங்கட்கு: எஸ். கே. சேனாதிராசா, 'சேனாதிராசா நகை மாளிகை', கொக்குவில் கிழக்கு. 261

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை முத்தாச்சி

காலம் சென்ற கணபதிப்பிள்ளையின் பிரிய பத்தினியும் பரராஜசிங்கம் (வைத்தியர், கஸ்தூரியார் வளவு), இளைய தம்பி (நல்லூர் கிராமசபை அங்கத்தவரும் பிரபல வியாபாரியும்) ஆகியோரின் அருமைத் தாயாரும் குணசிங்கம் (உதவித் தபால் அதிபர், சிலாபம்), பொன்னம்பலவாணர் (இலங்கை கடற்படை, திருக்கோணமலை) ஆகியோரின் பேத்தியாருமாகிய கணபதிப்பிள்ளை முத்தாச்சி நேற்று சிவபதமடைந்தார். அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் சந்திரசேகரபிள்ளையார் கோவிலடியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து செம்மணி மயானத்துக்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். க. பரராஜசிங்கம். 262

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.